## தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி
## மற்றும் மேம்பாட்டுக் கழகம்

**நீங்களும் முதலாளி ஆகலாம்**

# தாட்கோ மூலமாக
# சென்னையின் பாரம்பரியமான பில்டர் காபி
# (Chennai Super Koffee)
# தொழில் தொடங்க
# தொழில் முனைவோருக்கான
# அரிய வாய்ப்பு





ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்களின் பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்த தமிழ்நாடு முழுவதும் உள்ள பகுதிகளில் காலி இடமோ அல்லது கடையாகவோ வைத்திருப்பவர்களுக்கு சென்னையின் பாரம்பரியமான பில்டர் காபி தொழில் தொடங்கிட தாட்கோ இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

## தகுதிகள்:

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- வயது வரம்பு : 18 முதல் 55 வயது
- கல்வித்தகுதி: பத்தாம் வகுப்பு
- ஆண்டு வருமானம்: ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்
- காலி இடமோ அல்லது கடையாகவோ குறைந்த பட்சம் நூறு சதுரடி இடம் வைத்திருப்போர் காபி ஷாப் தொடங்கலாம்.
- இடம் இல்லாதோருக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள இடங்களிலிருந்து ஒன்றை தேர்வு செய்து தரப்படும்.



## திட்ட மதிப்பீடு விவரங்கள்

- திட்டத் தொகை: ரூ.10,00,000/- வரை
- தாட்கோ மானியம்: ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு திட்ட மதிப்பில் 35% அல்லது அதிகபட்சமாக ரூ. 3,50,000/- இலட்சம் மானியம் விடுவிக்கப்படும்.
- மேலும் 6% வட்டி மானியம் வழங்கப்படும்
- பயனாளி பங்கு தொகை: 5% மற்றும் மீதமுள்ள தொகையினை வங்கி கடனாக பெற்றுக் கொள்ளலாம்.



## தொழில் அமைப்பதற்கான சிறப்பு சலுகைகள்

- தொழில் தொடங்குவதற்கான தேவையான அனைத்து பொருட்களும் ஏற்பாடு செய்து தரப்படும்.
- தொழில் முனைவோர்கள் அல்லது அவர்களின் ஊழியர்களுக்கு தேவையான பயிற்சி அளிக்கப்படும்
- உரிமையாளர் கட்டணம் (Franchise Fees) ரூ.2,00,000/- முற்றிலுமாக நீக்கப்படும்
- விநியோகிக்கப்படும் பொருட்களுக்கு 5% வரை சிறப்பு தள்ளுபடி வழங்கப்படும்
- மாதாந்திர பில்லிங் மென்பொருள் கட்டணம் முழுவதுமாக நீக்கப்படும்
- தொழில் தொடங்க திட்ட அறிக்கை தயாரிக்க இலவச ஆலோசனை வழங்கப்படும்.

இத்திட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர் www.tahdco.com என்ற இணையதள முகவரியில் புகைப்படம் மற்றும் தொடர்புடைய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம். இத்திட்டத்தின் மூலம் மாதம் ரூ.40,000/- முதல் ரூ.50,000/- வரை இலாபம் பெறலாம்.

**Thiru. K.S.KANDASAMY,I.A.S**
Managing Director
Tamil Nadu Adi Dravidar Housing &
Development Corporation Limited (TAHDCO)
Website : www.tahdco.tn.gov.in & www.tahdco.com

## நீங்களும் முதலாளி ஆகலாம்

